# செயலாற்றுகை அறிக்கை

## சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

2015 - சனவரி - டிசம்பர்

சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

இல - 80, 4வது மாடி, அதிகரணமாவத்த, கொழும்பு 12

www.lawcom.gov.lk

## சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

(இல. 80, 4 ஆம் மாடி, அதிகரண மாவத்தை, கொழும்பு 12)

### 01. அறிமுகம்

1969 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டதுடன், இலங்கையின் சட்ட ஆணைக்குழு சட்ட மறுசீரமைப்புக்களை விதப்புரை செய்யும் பிரதான நிறுவனமாகும். நிருவாகத்திற்காகவும், ஆராய்ச்சிகளுக்காக ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காவும் சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

### 02. நோக்கு

- நல்லாட்சிக்காக சட்டத்தின் மறுசீரமைப்புக்களை மேம்படுத்தல்

### 03. செயற்பணிகள்

- சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்தல் .

### 04. நோக்கங்கள் மற்றும் பணிகள்

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாவது , சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்துவதே ஆகும். அத்தகைய மேம்பாடுகளை நோக்கமாகக் கொண்டு சட்ட ஆணைக்குழுவின் மூலம் பின்வரும் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

i. சட்டத்தைக் குறியீடு செய்தல்
ii. முரண்பாடுகளை ஒழித்தல்
iii. சட்டத்தை முறையாக அபிவிருத்தி செய்து மறுசீரமைப்பதற்காக பொருள் அளவிலானதும் நடவடிக்கை முறை சார்ந்ததுமான சட்டத்தை மீளாயவு செய்தல்
iv. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றுதல்
v. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்
vi. சட்டத்தை மறுசீரமைப்பதற்காக எவ்வாறான பிரேரணைகளையும் பெற்று பரிசீலித்தல்
vii. மறுசீரமைப்பதற்காக காலத்துக்குக்காலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்து அமைச்சருக்கு வழங்குதல்.
viii. ஏனைய நாடுகளின் சட்ட முறை சம்பந்தமான தகவல்களைப் பெறல்

ix. துணைச் சட்டவாக்கங்கள் நன்கு ஏற்றுக் கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டத்திற்கும் இயைபானதென்பதைப், பாதுகாக்கும் எண்ணத்துடன் பாராளுமன்றம் அல்லாத வேறு சபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிரந்தரமாக மீளாய்வு செய்தல் .

x. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையின் நடவடிக்கைமுறை உட்பட சட்ட நடவடிக்கை முறைகளை பகுத்தறிவு செய்தல் மற்றும் இலகுபடுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாக தயார் செய்தல்.

xi. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சட்டத்தை குறியீடு செய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்தல்.

## 05. <u>2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையிலான காலப் பகுதிக்குள் செயலாற்றுகை</u>

<u>சனவரி – பெப்ரவரி</u>

இக் காலத்துள் சட்ட ஆணைக்குழுவின் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

<u>மார்ச் -2015.03.28</u>

சட்ட ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக பின்வருபவர்கள் நியமிக்கப்பட்டனர்

1. சனாதிபதி சட்டத்தரணி திரு. ரொமேஸ் த சில்வா (தலைவர்)
2. பேராசிரியர் திரு. லக்ஷ்மன் மாரசிங்க
3. சனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித பெர்னாந்து
4. திரு. ஜே. எம். சுவாமிநாதன்
5. திரு. என். செல்வகுமாரன்
6. சனாதிபதி சட்டத்தரணி திரு. எம். இக்ரம் மொகமட்
7. சனாதிபதி சட்டத்தரணி திரு. எஸ். அனில் சில்வா
8. சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி திரு. ஹர்ஷ கப்ரால்
9. சனாதிபதி சட்டத்தரணி திரு. மனோஹார த சில்வா
10. சனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சீவ பீ. ஜயவர்தன
11. திருமதி. தாரணி எஸ் விஜேதிலக
12. பேராசிரியர் திருமதி. காமினா குணரத்ன
13. திரு. ஜீ.ஜீ. அருள்பிரகாசம்
14. திரு. திசத் விஜேகுணவர்தன
15. திரு. நவீன் சுரத் மாரபன

முதலாம் கூட்டம் 2015 மார்ச் மாதம் 28 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

2015 ஆம் ஆண்டுக்காக, முன்னர் இருந்த சட்ட ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்திச் செல்வதற்காக புதிய சட்ட ஆணைக்குழு இணங்கியதுடன் கீழே காட்டப்பட்டுள்ள சட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கும் முன் மொழியப்பட்டது.

- பிணைச் சட்டம்
- பிரிவிடல் சட்டம்
- பிள்ளைகளின் பராமரிப்பு
- திருமண வய்து
- நன்கொடை உறுதிகளை அழித்து விடுதல்
- பெரேட் எழுத்தாணை
- உயர்நீதிமன்ற விதிகளின் திருத்தங்கள்

<u>ஏப்பிரல் - 2015.04.26</u>

தேவையான சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பாக பொது மக்களினதும் தொழிற் சங்கங்களினதும் கருத்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சட்ட ஆணைக்குழு இணங்கியது.

தேவையான சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பாக பொது மக்களின் கருத்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சட்ட ஆணைக்குழுவினால் பின்வரும் பத்திரிகைகளில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

| | | |
|---|---|---|
| சிலுமின | - | 2015.04.26 |
| சண்டே ஒப்சவர் | - | 2015.04.26 |
| தினகரன் | - | 2015.04.26 |

<u>மே - 2015.05.15</u>

- <u>பரவேணி நிலகாரயாவுக்கு பிரிவிடல் வழக்கொன்றைக் கோவைப்படுத்துவதற்கு உள்ள உரிமை</u>

1951 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பிரிவிடல் சட்டத்தைத் திருத்தஞ் செய்வதற்காக சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராகிய திரு. நவீன் மாரபன அவர்களால் “பரவேணி நிலகாரயாவுக்கு பிரிவிடல் வழக்கொன்றைக் கோவைப்படுத்துவதற்கு உள்ள உரிமை” என்னும் தொனிப் பொருளில் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

ஆணைக்குழுவினால் பின்வரும் ஆராய்ச்சித் துறைகளை வருங்காலக் கூட்டங்களில் கலந்துரையாடுவதற்காக முன்மொழியப்பட்டது.

1. சமுதாய இணையத் தளங்கள் மற்றும் அந்தரங்கத்திற்கான உள்ள உரிமை
2. உயர்நீதிமன்ற விதிகளின் திருத்தங்கள்

- 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க அதிவேக வீதி ஒழுங்குவிதிகள்

  சட்ட ஆணைக்குழுவிற்கு திரு. ரீ. பேரின்பநாயகம் அவர்களால் "2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க அதிவேக வீதி ஒழுங்குவிதிகள்" என்னும் தொனிப் பொருளில் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

- நியதிச் சட்ட கற்பழிப்பு சம்பந்தமாக தண்டிக்கும் நடவடிக்கை முறை

  பேராசிரியர் திருமதி காமினா குணரத்ன மற்றும் திருமதி தாரணி எஸ். விஜேதிலக அவர்களால் "நியதிச் சட்ட கற்பழிப்பு சம்பந்தமாக தண்டிக்கும் நடவடிக்கை முறைக்காக" முன்னைய சட்ட ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை மீளாய்வு செய்வதற்கு கோரிக்கையொன்று செய்யப்பட்டது.

மே- 2015.05.28

- பரவேனி நிலகாரயாவுக்கு பிரிவிடல் வழக்கொன்றைக் கோவைப்படுத்துவதற்கு உள்ள உரிமை

  நீதி அமைச்சரிடம் (பரவேனி நிலகாரயாவுக்கு பிரிவிடல் வழக்கொன்றைக் கோவைப் படுத்தவதற்கு உள்ள உரிமை) பிரிவிடல் சட்டம் சம்பந்தப்பட்ட உத்தேச திருத்தங்களுடனான வரைவை சமர்ப்பிப்பதற்காக சட்ட ஆணைக்குழு இணங்கியது.

- மாற்ற முடியாத நன்கொடை உறுதிகளை அழித்துவிடுதல்

  நல்லெண்ணத்துடனான கொள்வனவாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மாற்ற முடியாத நன்கொடை உறுதிகளை அழித்துவிடுதல் சம்பந்தமாக பாதுகாப்பு இடை வசனங்களை வரைவதற்கும் பிரிவிடல் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கும் சட்ட ஆணைக்குழு இணங்கியது.

- சமுதாய இணையத்தளங்கள் மற்றும் அந்தரங்கத்திற்கான உரிமை

  திரு. ஜே.எம். சுவாமிநாதன் மற்றும் சனாதிபதி சட்டத்தரணி திரு. ஹர்ஷ கப்ரால் அவர்களால் தயாரிக்கப்பட்ட சமுதாய இணையத்தளங்கள் மற்றும் அந்தரங்கத்திற்கான உரிமை சம்பந்தப்பட்ட திருத்தங்களுடனான வரைவு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- உயர்நீதிமன்ற விதிகளின் திருத்தங்கள்

  சட்ட ஆணைக்குழுவின் தலைவரால் சனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சீவ ஜயவர்தன அவர்களுக்கு உயர்நீதிமன்ற விதிகளின் திருத்தங்கள் சம்பந்தமாக முன்மொழிவு பத்திரமொன்றை வரையுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

யூன் 2015.06.26

- மேன் முறையீட்டு நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட திருத்தம் (1990 மேன்முறையீட்டு நடவடிக்கை முறைச் சட்டம்.

சனாதிபதி சட்டத்தரணி திரு. மனோஹர த சில்வா அவர்களால் தயார் செய்யப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட திருத்தத்திற்காக (1990 மேன்முறையீட்டு நடவடிக்கை முறைச் சட்டம்) உத்தேச திருத்தங்களுடனான வரைவு கலந்தாலோசனை செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பின்வரும் விடயங்களும் கலந்தாலோசனை செய்யப்பட்டன.

- அந்தரங்கம் மீறப்படுதலுக்கான தண்டனை
- இலத்திரன் வழிகளினூடாக பாலியல் செயலொன்றை பிரகடனம் செய்தல் அல்லது ஒளிபரப்புதலுக்கான தண்டனை வெளிப்படுத்தும் செயலொன்றை வெளியிடுதல் அல்லது ஒளிபரப்புதலுக்கான தண்டனை.
- இலத்திரன் வழிகளினூடாக பாலியல் செயலொன்றில் பிள்ளைகளைக் காண்பிக்கும் காட்சிகளைப் பிரகடனம் செய்தல் அல்லது ஒளிபரப்புதலுக்கான தண்டனை.

யூலை -2015.07.10

- நியதிச்சட்ட கற்பழிப்பு சம்பந்தமாக தண்டிக்கும் செயற்பாடு

நியதிச்சட்ட கற்பழிப்பு சம்பந்தமாக தண்டிக்கும் செயற்பாட்டின் முக்கியத்துவத்தை அவ்விடயத்திற்கான பின்னணியை இனங்கண்டு, அதை திருத்தஞ் செய்வதற்காக முன்மொழியக்கூடிய உயரிய தீர்வுகளைப் பற்றி தலைவர் எடுத்துக் கூறினார்.

- தேசிய அவுடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபைச் சட்டம்

இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அழகு சாதனங்கள் மற்றும் அவுடதங்கள் சட்டத்தை நீக்கி, 2015 மார்ச் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய அவுடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபைச் சட்டம் என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதென திரு. எம். சுவாமிநாதன் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தார். 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டம் அவுடதங்கள், அழகு சாதனங்கள் மற்றும் அதன் பொருள் கோடல் எல்லையில் உள்ள உற்பத்திகளைப் பற்றி விபரிக்கின்றது. இச் சட்டத்தின் மூலம் அழகு சாதனங்கள் பதிவு செய்தல் தொடர்பாக ஏற்பாடுகள் காட்டப்படவில்லை என மற்றும் அதன் மூலம் பொது மக்களுக்கு பாதகமான தாகத்தை ஏற்படுத்தலாம் என ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

மேற்கூறிய விடயத்தை ஆராய்ந்து பார்த்த பின்னர் அழகு சாதனங்களை பதிவு செய்தல் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய சட்டவாக்கத்தை கண்டு பிடிப்பதற்கு ஆணைக்குழு இணங்கியது.

யூலை 2015-07-30

- **பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டு வியாபாரச் சட்டம் பற்றிய திருத்தங்கள்**

இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காளர்களின் நிறுவனத்தால் (ICASL) செய்யப்பட்ட கோரிக்கையின்படி, பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டு வியாபாரங்கள் சம்பந்தமாக முன்னைய சட்ட ஆணைக்குழுவினால் காட்டப்பட்ட சட்ட மறுசீரமைப்பு பரிந்துரைகளை மீள ஆராய்வதற்கு சட்ட ஆணைக்குழு இணங்கியது.

- **மோட்டார் வாகனச் சட்டத்தின் திருத்தம்**

சனாதிபதி சட்டத்தரணி திரு.சஞ்சீவ பீ. ஜயவர்தன அவர்களால் பொது போக்குவரத்துக்காக கவனயீனமான வாகன செலுத்துதலை குறைத்துக் கொள்ளல் மற்றும் பொறுப்பை உள்ளடக்கி மோட்டார் வாகனச் சட்டத்தை திருத்தஞ் செய்வதற்கு பிரேரிக்கப்பட்டது.

செப்தெம்பர் 04.09.2015

- சமுதாய இணையத்தளங்கள் மற்றும் அந்தரத்திற்கான உரிமை

  “அந்தரங்கம் மீறுதலுக்கான தண்டனைகள்” தொடர்பான ஆராய்ச்சிக் கடிதம் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

  செப்தெம்பர் 17.09.2015

- பிரிவிடல் சட்டம்
  பிரிவிடல் சட்டத்துக்கான உத்தேச திருத்தம் முடித்துக் கொள்ளப்பட்டது.

- உயர்நீதிமன்ற விதிகள்
  மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட உத்தேசத் திருத்தங்கள் (1990 மேன்முறையீட்டு நடவடிக்கை முறை) தொடர்பான மேம்படுத்தப்பட்ட வரைவு முடித்துக் கொள்ளப்பட்டது.

- மாற்ற முடியாத நன்கொடை உறுதிகளை அழித்துவிடுதல்
  உத்தேச வரைவு முடித்துக் கொள்ளப்பட்டது.

ஒக்ரோபர் 2015-10—16

சமுதாய இணையத்தளங்கள் மற்றும் அந்தரங்கத்திற்கான உரிமை சம்பந்தமாக தொழில் புரிநர்களின் மற்றும் அது பற்றி விசேட ஆர்வமுடையவர்களின் கருத்துரைகளைப் பகிர்ந்து கொள்ளுவதை நோக்கமாகக் கொண்டு 16.10.2015 ஆம் திகதி கூட்டமொன்று நடாத்தப்பட்டது. பின்வரும் பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர்.

1. திரு. எல் பாலபட்டபெந்தி, பிரதி சொலிஸிட்டர் ஜனரால், சட்டமா அதிபர் திணைக்களம்
2. திரு. சுமதி தர்மவர்தன, பிரதி சொலிஸிட்டர் ஜனரால், சட்டமா அதிபர் திணைக்களம்
3. திரு. சாலிய பீரிஸ், உப தலைவர், சட்டதத்தரணிகள் சங்கம்,
4. திரு. தொடவத்த , அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனி

ஒக்ரோபர் 2015.10.19

1910/2015 ஆம் திகதி மாண்புமிகு நீதி அமைச்சரின் அழைப்பின்பேரில் சட்ட ஆணைக்குழு உறுப்பினர்கள் அவரைச் சந்தித்தனர்.

அக் கூட்டத்தின்போது ஆணைக்குழுவினால் பின்வரும் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- பிரிவிடல் சட்டத்திற்காக உத்தேச திருத்தங்கள்
- அந்தரங்கம் சம்பந்தப்பட்ட சட்டத்திற்காக முன்மொழியப்பட்ட அந்தரங்கம் மீறக் கூடிய சந்தர்ப்பங்கள்
- நன்கொடை சட்டம் சம்பந்தப்பட்ட உத்தேச அழித்துவிடுதல்கள்
- மோட்டார் வாகனங்களுக்கான திருத்தமொன்று
- உயர்நீதிமன்ற விதிகளுக்கான திருத்தமொன்று

பின்வரும் விடயங்கள் சம்பந்தமாகவும் ஆராய்ந்து பார்க்குமாறு ஆணைக்குழுவிடம் அமைச்சர் கோரிக்கையொன்றைச் செய்தார்

1. இலஞ்ச சட்டத்திற்கான திருத்தம்
2. அடைமானச் சட்டத்திற்கான திருத்தம்
3. குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைக்கான திருத்தம்

நவம்பர் 2015.11.20

வருங்காலத்தில் நடாத்தப்படவுள்ள சட்ட ஆணைக்குழுக் கூடட்டங்களில் கலந்தாலோசனை செய்வதற்காக பின்வரும் விடயப் பொருள்கள் சம்பந்தமாக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் புதிய முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர்.

- வாடகைச் சட்டத்திற்கான திருத்தம்
- குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைக்கான திருத்தம்
- உளதாம் மணநீக்க நடவடிக்கை முறைக்கான திருத்தம்

**திசெம்பர் -2015-12.08**

வெளிநாட்டு அலுவல்கள் மாண்புமிகு அமைச்சர் மற்றும் அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சர் ஆகிய அமைச்சர்களின் தலைமையில் 18/11/2015 ஆம் திகதி, வர்த்தக மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கான உத்தேச திருத்தங்கள் சம்பந்தமாக கூட்டமொன்று நடாத்தப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கான உத்தேசத் திருத்தங்கள் சம்பந்தமாக செயலாற்றப்படுகின்ற விதத்தைக் காட்டும் வரைவொன்றைத் தயார் செய்வதற்கு ஆணைக்குழு இணங்கியது.

**திசெம்பர் -2015-12.18**

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கான உத்தேச திருத்தங்கள் சம்பந்தப்பட்ட கருத்துரைகளைப் பகிர்ந்து கொள்வதற்காக கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

பின்வரும் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

1. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.எம்.ஏ. சுமந்திரன்
2. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. உதய கம்மன்பில
3. சனாதிபதி சட்டத்தரணி திரு. சவீந்திர பெர்னாந்து, மேலதிக சொலிஸிட்டர் ஜனரால்
4. சனாதிபதி சட்டத்தரணி திரு. யசந்த கொதாகொட, மேலதிக சொலிஸிட்டர் ஜனரால்
5. அரசாங்க சட்டத்தரணி திரு. அசாட் நவாவி

**07. நிதிசார் முன்னேற்றம் (2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை)**

(மூலதனம் மற்றும் மீண்டுவரும்)

| விபரம் | 2015ம் ஆண்டுக்கான ஒதுக்குதல் | 2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு செலவினம் | % |
|---|---|---|---|
| மூலதன செலவினம் | 2,000,000 | 1,131,702 | 56.59% |
| மீண்டுவரும் செலவினம் | 15, 000,000 | 10,163,305 | 67.76% |
| மொத்தம் | 17, 000,000 | **11,295,007** | **66.44%** |